# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

**மானியக் கோரிக்கை எண்-37**

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

## அறிவிப்புகள்
## 2017–2018

**பி. தங்கமணி**
மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2017

## உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அறிவிப்புகள் 2017 – 2018

### 1. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனை பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குதல்

### Pay increase for TASMAC Retail Vending Personnel

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் 26,679 சில்லறை விற்பனைப் பணியாளர்கள் உள்ளனர். இவர்கள் தொகுப்பு ஊதிய முறையில் பணியாற்றி வருகிறார்கள். இந்தப் பணியாளர்களுக்கு தொகுப்பு ஊதியமானது 2011, 2012, 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆறு ஆண்டுகளிலும் உயர்த்தி வழங்கப்பட்டது. இந்த ஆண்டும், **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர்**

**அவர்களின் ஆணையின்படி** மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் உதவி விற்பனையாளர்களுக்கு மாத தொகுப்பு ஊதியம் முறையே ரூ.500/– ரூ.400/– மற்றும் ரூ.300/– என உயர்த்தி வழங்கப்படும். இந்த ஊதிய உயர்வுகள், செப்டம்பர் 2017 முதல் நடைமுறைப்படுத்தப்படும். இதனால் டாஸ்மாக் நிறுவனத்தில் பணிபுரியும் 7,203 மேற்பார்வையாளர்களும், 15,744 விற்பனையாளர்களும் மற்றும் 3,732 உதவி விற்பனையாளர்களும் பயன்பெறுவர். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ரூ.13.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 2. மது அருந்துதலுக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளுதல்

## Conducting Awareness Campaigns against Consumption of Liquor

குடிப்பழக்கத்திற்கு மக்கள் அடிமையாகாமல் இருக்கவும், அவ்வாறு குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள், அப்பழக்கத்தைக் கைவிட வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடனும், மதுப்பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ள, மாவட்டந்தோறும் மதுபானங்கள் மற்றும் கள்ளச்சாராயத்தினால் ஏற்படும் தீமைகளைப்பற்றி, விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் முகாம்கள் நடத்த, 2015 - 2016, 2016 - 2017–ஆம் ஆண்டுகளில், ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியாண்டிலும் **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 3. கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் கள்ள மதுபானத் தொழிலில் ஈடுபட்டு மனம் திருந்தியவர்களுக்கு மறுவாழ்வு நிதி வழங்குதல்

## Providing Assistance for Rehabilitating persons who have been weaned away from illicit distillation and illicit liquor trade

தமிழ்நாட்டில் கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் அதன்மூலம் ஏற்படும் தீமைகளை முற்றிலும் களையவும், இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களை கள்ளத்தனமாகக் கடத்துதல், விற்பனை செய்தல், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைக் கள்ளத்தனமாக விற்பனை செய்தல், தெளிந்த சாராவி கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல், கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய

குற்றங்களுக்கு சிறைத் தண்டனை பெற்று விடுதலையாகி, திருந்துபவர்களின் பொருளாதார மறுவாழ்வுக்காகவும், அவர்கள் மீண்டும் இத்தொழிலைத் தொடராமல் வேறு தொழில்களை மேற்கொள்ள உதவுவதற்காகவும், 2011-2012-ஆம் ஆண்டு முதல் ரூ.5.00 கோடி மானியமாக மறுவாழ்வு நிதி வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியாண்டிலும், **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.5.00 கோடி மானியமாக மறுவாழ்வு நிதி வழங்கப்படும்.

4. தென்னை மரத்திலிருந்து நீராவை பிரித்தெடுத்தல் மற்றும் பதப்படுத்துதல், நீரா மற்றும் நீராவிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்களை விற்பனை மற்றும் ஏற்றுமதி செய்ய உரிமம் வழங்குதல்.

Extraction and Processing of Neera from Coconut Trees and to issue licences for Marketing and Export of Neera and products manufactured from Neera.

**இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** தென்னை மரத்திலிருந்து நீராவை பிரித்தெடுத்து மற்றும் பதப்படுத்துவதனை எளிதாக்கிடவும், நீரா மற்றும் அதிலிருந்து வெல்லம், தேன், பிஸ்கெட்டுகள், சர்க்கரை போன்ற பிற பொருட்களை தயாரித்து விற்பனை மற்றும் ஏற்றுமதி செய்ய உரிமம் வழங்குவதற்கு ஏதுவாக, 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் உரிய விதிகளில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

இதன் மூலமாக தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரம் பொருளாதார ரீதியாக மேம்படும். மேலும், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும்.

**பி. தங்கமணி**
மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்